
முருகன் டாக்கீஸ் தயாரிப்பு!
ASOK-KUMAR
அசோக் குமார்
MTF

# அசோக்—குமார்

## அசோக் & திஷ்யா

திஷ்யா :— ஸுகம் தருதே சோலை வாஸந்தானே ஏக அமோஹம்
அசோக்:— ஜகமதிலே யோகசாலீ நாமே சேர்ந்தவைபோகம்
திஷ்யா :— குயிலின் இனிய குரலைக் கேளீர்
அசோக்:— ஒயிலோ டுலவும் மயிலைப் பாராய்
திஷ்யா :— கொஞ்சும் அஞ்சுகங்கள் காணீர்
அசோக்:— குமுறும் வெண்புறாக்கள் பாராய்
திஷ்யா :— இதுவே உண்மை ப்ரேமை
அசோக்:— ஈசனின் செயலின் அருமை
திஷ்யா :— மாமதனுவாரும் கணமே நாமும் மனம் மகிழ்வோமே
அசோக்:— வாவனிதா மணியே மனம்போல் என்றும்
வாழ்ந்திடுவோமே (ஸுகம்)

ராகம்—கல்யாணி] **குணாளன்** [தாளம்—ஆதி

பல்லவி: மாநில வாழ்வு பெரும் ஆனந்தம்
வானுலகோர் அறியார் என் கண்ணே (மா)

அ. பல்: கானமுடன் எழில் மான்விழி மாதே
அபிமானமும் அன்பும் கலந்திருந்தால்-இந்த (மா)

சரணம்: என் மன உண்மைநிலை நீ அறிய
எடுத்துரைத்தும் மௌனம் படைத்தனை அன்பே!
உன்மன சம்மதம் உண்டோ இலையோ
உணர்ந்து மகிழ வெளிக்காட்டலாகாதோ (மா)

## குணாளன் & காஞ்சனா

குணா :- உள்ளங் கவருமென் பாவாய்—நான்
உயர்ந்த அழகன் தானோ—உலகெலாம் புகழ்வதேன்
உண்மை சொல் பெண் மானே (உ)

காஞ் :- யாரும் நிகரில்லையே—மாரா மன மோஹனா

குணா :- வெறும் வேஷமே அணிவதால் அழகே வந்திடாதே (உ)

காஞ் :- கண்டாரிகழ்ந்திடும் பெண்டீரணிந்திடும்
பட்டாடையும் முத்தாரமும் மேன்மை தாராதோ
உதார குண கெம்பீரா

---

M. K. தியாகராஜ பாகவதர் — குணாளன்.

துஜ :- கண்ணே த்ரிலோக் சுந்தரீ வீணே அலங்காரமேன்
அன்பே சொலாய் அழகிலே அழகே செய்வதுண்டோ (உ)

ராகம்—காபி] துஜளன் [தாளம்—ஆதி

பல்லவி: த்யானமே எனது மனது நிறைந்தது
சந்திர பிம்ப வதனம் தனில் தினம் (த்யா)

அ. பல்: காந்த சக்தியை இந்நாள் அறியேன் நான்-இரு
கண் மயங்கி ஸ்வாதீனமின்றி (த்யா)

சரணம்: லோகமு மதிலே தோன்றுமிந்த்ரிய
போகமும் யாவும் துறந்தேன் விஷய (கமல)
முகமும் வசீகர நீளிரு விழிகளும்
மோஹன உருவும் பெயரும் ஆக உன் (த்யா)

ராகம்—பைரவி] துஜளன் [தாளம்—ஆதி

பல்லவி: உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ—வடி
வழகிலும் குணமதிலும் நிகரில் (உ)

அநு பல்லவி: அண்டரிலே நில மண்டலமேல்—பா
எண்டிசை ஆடவர் பெண்டிரில் தேவா (உ)

தீரத்திலே உயர் கம்பீரத்திலே—கொடை
உதாரத்திலே நடை ஒய்யாரத்திலே (உ)

தானத்திலே சொல் நிதானத்திலே—கலை
ஞானத்திலே லரஸ கானத்திலே (உ)

ஹிந்துஸ்தானி] திஷ்யா

மதனனே வா ஸ்ருங்காரா
மனங் கவர் நேசா உல்லாசா (ம)

தாமரை முகமே காண இந்நாளே
சித்தம் உருகுதே வார்த்தை சொல்லாயோ (ம)

பிரேம ரூபன் ப்ரிய சல்லாபன்
வீர ப்ரதாபனே குணாளா (ம)

அன்பன் நீயே அடியாள் உனையே
என்று காண்பேனோ இங்கே நான் (ம)

## பிரமீளா & தேரையன்

பிர:— விட்டிடமாட்டேன் தொட்டெனை கட்டியணைத்திடுவாய்
தட்டிடமாட்டேன் கழுத்தில் தாலியுங் கட்டிடுவாய்
இஷ்டப்படுமென் மனநிலை கஷ்டந்தெரியலையோ
இன்பமாய் என்முன் பேசாமல் இருப்பது சரியோ

தேரை:-ஐயய்யய்யோ ஏதேது அதிக நோய் வந்திடுச்சே
அப்பாவராட்டும் கைபாத்து ஔஷதம் வாங்கிதாரேன்

பிர:— ஔஷதத்தாலே ஆகாது ஆசையென்னும் பிணியே
ஆகையினாலே சொன்னேன் ஆவிக்குநீ துணையே

தேரை:துணையிருக்கும் சிப்பாய்போலேதோணுதோ என்னைபாத்தா
தொல்லைபடுத்தாமல் சொல்லை தடுக்காமல்
தொலைஞ்சு போயிடாத்தா (விட்டிட)

ஹிந்துஸ்தானி] தீஷ்யா

பல்லவி: தபயோகம் பலிக்கும் நாளே
தபயோகம் பலிக்கும் இந்த நாளே
ஸபலமாகுமே என் ஜென்மம் தான்

அ. ப: மானவீகமாய் மன்னன் சேரவே நானும் செய்த என் (த)

சரணம்: ப்ராண காந்தனும் வருவார் வருவார்
ப்ரேமையோடவர் இன்பந் தருவார்
பாரினில் மா பாக்ய சாலியும் நானே
யாரெனக்கே நிகர் ஆவது தானே

ஆ ஹா ஹா ஹ ஹ ஹா ஸரஸ மதனனும் சேர்ந்திடுவாரே (த)

ராகம்—ஜோன்புரி] தூறளன் [தாளம்—ஆதி

பல்லவி: ஸத்வ குண போதன்—சரணமிருக்க
சித்தமும் வீணே கலங்குவதேனோ

அ. பல்: கல்லினுள் தேரைக்கும் கருப்பையுயிர்க்கும்
புல்லுணவே தந்து போற்றும் நம் நாதன் (ஸ)

சரணம்: கண்ணிழந்தாலென்ன கடவுட்கும் என்ன
கண்ணில்லையோ நம்மைக் காக்கும் தயாளன் (ஸ)

---

P. கண்ணாம்பா — திவ்யரக்ஷிதை.

ராகம்—ஸிந்து பைரவி] துறைளன் [தாளம்—ரூபகம்

1 வன்பசிப் பிணிக்குணவு நம் கையில் கிட்டினும்
வாய்க்கு மெட்டுமோ
முன்பயில் வினைக் கவர மாயமாய்
மறையும் மோஹமும் பாழ்படும்
இன்பமென்பது கானல் நீர்முயல் கொம்புகாண்
எல்லாம் முடிவிலே
துன்பமே உயிரன்பு வைத்தல்
விவேகமே ஸுக போகமே

2 துன்பமே நிறை வாழ்விலே அலைகடலிலே
சுழல் துரும்புபோல்
என்புதோல் பொதி உடலிலே உழன்றி
ருதலைக்கொள்ளி எறும்புபோல்
வன்பு சேர் அறுபகை வளர் நெஞ்சக் குரங்கின்
கைப்பெறும் மாலைபோல்
அன்பர்காள் இன்பமின்ப மென்றுண்மை
அறிவிழந்து மெய் மயங்கினேம்

ராகம்—குந்தளவாளி] துறைளன் [தாளம்—ஆதி

பல்லவி: மனமேநீ ஈசன் நாமத்தை
வாழ்த்துவாய் தினம் வாழ்த்துவாய்

அ. பல்: கனவெனும் வாழ்வில் கலங்கி வாடாதே
காதலை மாதரைப் புகழ்ந்து பாடாதே (ம)

ஸ்வர ஸாஹித்யம்: காம மோஹ மத வைரிகள் வசமாய்
கர்மவினை சூழலக வாதனையில்
தடு மாறும் மனமோடு துயறு ராமல்
நிரந்தரமும் மகிழ்ந்துபர சுகம் பெறவும் (ம)

சரணம்: விளங்கும் தூய ஸர்ஜன ஸங்கம்
விடுத்தே கூடாதே துஷ்டர் ப்ரஸங்கம்
விளக்கில் வீழும் பழமென்று மயங்கும்
விட்டிலாகாதே சஞ்சலமெங்கும் (ம)

N. S. கிருஷ்ணன் — வைத்தியன், தேரையன்.

துணைவன்: 1 பூமியில் மானிட ஜென்ம மடைந்துமோர்
புண்ணியமின்றி விலங்குகள் போல்
காமமும் கோபமும் உள்ளம் நிரம்ப-வீண்
காலமும் செல்ல மடிந்திடவோ

2 உத்தம மானிடராய்ப் பெரும் புண்ணிய
நல் வினையால் உலகில் பிறந்தோம்
ஸத்திய ஞான தயாநிதியாகிய
புத்தரைப் போற்றுதல் நம் கடனே

3 உண்மையுமா ருயிரன்பும் அஹிம்ஸையும்
இல்லையெனில் நரஜென்மமிதே
மண்மீதிலோர் சுமையே பொதி தாங்கிய
பாழ் மரமே வெறும் பாமரமே

துணைவன்: உன்னையே அன்புடன் வாரியணைக்கும்
அன்னையே ஊணினைத் தேடவும் சென்றாள் விதி
கண்ணை இழந்தேன்-காணவுமில்லேன் [வசமிதே
கண்மணி நீயே-கண்ணுறங்காயோ
வானமுதே தேனே வாழ்குல சீமானே
இருகண் வளர் தாலேலோ
புன்னகை மாமுக கனி பிழி ரஸமே
தாதியர் சூழத் தங்க மஞ்சமேலுறங்க
விழிகள் குளிரக்காணும் பூஜை செய்திலோமே
தங்கமே ஏழை எமதாவியும் நீயே ஆவியும் நீயே

தேரையன்:- தெரிஞ்சுகிட்டேன் விஷயம் புரிஞ்சுகிட்டேன்
தெளிவாகவே காதல் இனதிண்ணு (தெரி)

கண்கள் ரெண்டும் கர்ணம் போடுது
கட்டி பிடிக்க மனமும் வருது
கண்ணே கனியே கனிரசமே யென
உன்னை கூப்பிட வேணுமெங்குது
முத்தந்தா முத்தந்தா முத்தந்தா இனி
நித்தந்தான் முழுமோகமே
ஆகுதெனக் கொரு (தெரி)

T. V. குமுதினி—காஞ்சனமாலை. T. A. மதுரம்—பிரமீளா.

பித்தாசையாகுதே நத்தாசை மீறுதே
பேசபேசக் காமாசையும் பெருகுதே
பேடைக்குயிலே மாடப்புறுவே யுனே
கூடிடவே மனம் நாடிடுதே யிதை (தெரி)

உபதுப்தர்:- பொய்யை மெய்யாய் போற்றி வாழும்
நாய் ஓர் எலும்பை தூக்கி அலேயும்
ஞாயமதே போல் நீ அலேயாதே
நானிலமேல் நலமென்றே நீ நம்பி
மோசமடைந்து பாழாகாதே.

துறளன் & காஞ்சன

துண :- கிடையாது வாழ்வினிலே—ஸுகமே
கொடும் கானலில் நீர்தனில் தாகம் தீருமோ (கி)

காஞ் :- எண்ணரிய தவம் பெரிய புண்ணியமிதுவே
உயர் ஜீவ காருண்யம்

துண :- ஹிம்சை விளே பொய் சதி சேரும்
கொடுமொழி பேசுவதாலே (கி)

காஞ்:- நெஞ்சிலிரக்கம் கொஞ்சமுமின்றியே
ஜீவவதை புரியும்

துண :- கொலேஞர்களாகுல் பரமதயாளன்
பூரணனருள் சிறிதேனும் (கி)
கனவிலும் மண்பொருள் மாதரில் ஓயா
மோஹ மாயையிலே

காஞ் :- மீட்சி காணேம் திசைதிசை திரிந்தோம்
அற்பரை வந்தனே செய்தோம் (கி)

ராகம்—ஸிந்து பைரவி] திஷ்யர் [தாளம்—ஆதி

தஞ்சம் நீ கதியே
அஞ்சேல் என அபயம் அருள்நிதியே (த)
பஞ்சமா பாதகம் பல புரிந்தேனே
பாவி நான் ஏன் பிறந்தேன் புவிமீதே
சரண் புகுந்தேன் (த)

மீறிய காமத்தில் வரையறை மீறி
மிரண்டு செய்தேன் எல்லாம் மதி தடுமாறி
மறு எந்தன் பிறவியிலாகிலும் ஆதரி
மனம்போல் வாழ்வு தந்தே நீ உபஹரி (த)

விருத்தம்] துறவன் [ராகமாலிகை

சினம் காமம் பொய்களவு வஞ்ச நெஞ்சர்
சுய நலமே கொண்டு ஊன் தின்று உடல் வளர்ப்பார்
தனியிருந்து உணவு கொள்ளாக் காகம் கண்டும்
தன்னுயிர்ப்போல் மன்னுயிரைப் பாரார்
தேமாங்கனி யிருக்கக் காஞ்சிரங்கா யுண்ணவெண்ணும்
அக் கசடர்தமக் கிரங்குகின்றேன்
கருணை விண்ணே புனித என் குணக்குன்றே புத்தமூர்த்தி
போதி நிழலமர்ந்தவனே அருட்கண் பாராய்

ராகம்—மோஹனம்] பாட்டு [தாளம்—ஆதி

பாருலகிலு ழன்று நொந்தேன் நொந்தேன்
பாபவினை புரிந்தழிந்தேன் வந்தேன்
காரிருள் மாயைக் கிடந்தந்தேன் தந்தேன்
கமலப்பதம் மறந்தலைந்தேன் எந்தாய்
க்ர்ப வாஸ மினித்தாளேன் தாளேன்
கர்ம பந்தப் பிறவி மீளேன் மீளேன்
அற்புத புத்த மூர்த்தி நாளும் நாளும்
அடிமை கொண்டென்னை யினி ஆளும் ஆளும் (பா)

---

| | | | |
|---|---|---|---|
| டைரக்ஷன் | ... | ... | ராஜா சந்திரசேகர். |
| பாடல்கள் | ... | ... | பாபநாசம் சிவன். |
| வசனம் | ... | ... | இளங்கோவன். |
| ஸ்டூடியோ | ... | ... | நியூடோன். |

Rajeswari Press, Madura.